1979 பிப்ரவரி 19]

[முற்பகல் 11-20]

(இ) நகர்ப்புற நிலம் (உச்ச வரம்பு கட்டுதலும், முறைப் படுத்துதலும்) குறித்த திருத்த சட்ட முன்வடிவு 1979.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்த சட்ட முன்வடிவு பேரவைமுன் அறிமுகப் படுத்த அனுமதி கோருகிறேன்.

திரு. க. சுப்பு: தலைவரவர்களே, இந்த நகர்ப்புற நிலம் (உச்சவரம்பு கட்டுதலும், முறைப்படுத்துதலும்) குறித்த திருத்தச் சட்டமுன்வடிவை நான் எதிர்க்கிறேன். இதிலே ஏற்கெனவே பல கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, சாரிட்டபிள் என்டோமென்ட் போன்ற நிறுவனங்களுக்கு விதிவிலக்கு என்று இருப்பதால், உச்சவரம்புச் சட்டத்தின்படியுள்ள மிச்ச நிலத்தை எடுக்க முடியவில்லை. அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் சாதாரண மக்களே தவிர மிராசுதாரர்கள் அல்ல. அண்ணாமலை யுனிவர்சிட்டி பெயரால் செட்டியார் விதிவிலக்கு என்ற அடிப் படையில் ஆயிரக்கணக்கான ஏக்கர் நிலத்தை வளைத்து வைத்துக் கொண்டிருக்கிறார். ஏற்கெனவே இருந்த சட்டத் தின்படி, மிச்ச நிலத்திற்கு விதிவிலக்கு இல்லாமல் மொத்தத்தையும் எடுத்துவிட வேண்டும். இல்லையென்றால் சட்டமே தேவையில்லை என்று சொல்லிவிடலாம். மிராசுதாரர்களிடம் இருக்கின்ற மிச்ச நிலத்தை எடுக்கமுடியாத நிலையில் இப்படி துண்டு, துண்டு சட்டங்களாகக் கொண்டுவந்தால் கடைசியில் மிச்சமிருக்கும் நிலம் 'சீரோ' தான். அதனால் இந்த சட்டமே 'சீரோ' என்ற முறையில் நான் இதை எதிர்க்கிறேன்.

அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி அளிக்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்: பேரவைத் தற்காலிகத் தலைவரவர்களே, இச்சட்ட முன்வடிவை பேரவைமுன் அறிமுகப் படுத்துகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பி. எச். பாண்டியன்) சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.